ஜாதிவாரிக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு உடனே எடுக்க வேண்டும்! பொதுத் துறை நிறுவனங்களில்

# தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குக!

## திராவிடர் கழகப் பொதுக்குழுவில் தீர்மானங்கள்!

சிதம்பரம், பிப்.17-

தனியார்த் துறைகளிலும் இட ஒதுக்கீடு, பொதுத் துறைகளிலும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்ட 14 தீர்மானங்கள் சிதம்பரத்தில் நேற்று (15.2.2025) காலை நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள் வருமாறு:

**மாநில உரிமைகளை பறிக்கும் செயல்!**

‘மருத்துவ உயர் கல்வியில், இருப்பிடம் சார்ந்த இட ஒதுக்கீடு கூடாது’ என்ற உச்ச நீதிமன்ற உத்தரவு, மாநில உரிமையைப் பறிக்கும் செயல் மருத்துவ முதுகலை பட்டப்படிப்புகளில் ‘இருப்பிடத்தை அடிப்படையாகக் கொண்ட இட ஒதுக்கீடு அனுமதிக்க தக்கதல்ல’ என இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மருத்துவத்துறை என்பது மாநில அரசின் கட்டுப்பாட்டில் வரக்கூடியது. ஆனால், கல்வி பொது பட்டியலில் உள்ளது என்பதால்தான் ஒன்றிய அரசு தொடர்ந்து இதில் தலையிடுகிறது என்று கூறப்படுகிறது. “பொதுப் பட்டியல்” என்ற மொழியாக்கமே தவறான ஒன்று! ஒத்திசைவுப் பட்டியல் (Concurrent List) என்பதே சரியானது. அதனை மறந்து அல்லது மறுத்து செயல்படுவது சட்ட ரீதியாகவே தவறானதும், முறைகேடுமாகும். மருத்துவக் கல்வி இடங்களை மாநில அரசுதான் செலவு செய்து உருவாக்குகிறது. அதற்கான செலவு, கட்டமைப்பு, கருவிகள், மருந்துகள் அனைத்தும் அளிப்பது மாநில அரசுதான். அப்படியிருக்கும்போது அகில இந்திய ரீதியில் ஒதுக்கீடு என்பது எப்படி சரியானதாக இருக்க முடியும் என்பது தான் நமது முக்கிய கேள்வியாகும். ஏற்கெனவே, ஒவ்வோர் ஆண்டும் மருத்துவ முதுநிலைப் படிப்புகளில் அகில இந்தியத் தொகுப்புக்கு 50 சதவீத இடங்களைத் “தாரை வார்த்து” விட்டு, மீதமுள்ள 50 சதவீத இடங்களைத் தன் விருப்பப்படி நிரப்பும் உரிமை மட்டும் தான் மாநிலத்திற்கு உள்ளது. (இதுவே அரசமைப்புச் சட்ட விதிக்குத் தரப்படும் தவறான விளக்கத்தின் விளைவு) இதில், தன் விருப்பப்படி, மாநில அரசு முடிவெடுக்கக் கூடாது என்பதும், இந்த இடங்களில் இந்திய அளவில் யார் வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதும், முறைகேட்டின் உச்சக்கட்டம் என்பதை இப்பொதுக்குழு திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு காரணமாக, வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் முதுநிலை மருத்துவ பட்டப்படிப்புகளில் 1200-க்கும் மேற்பட்ட இடங்கள் பறிபோகும் அபாயம் உருவாகியிருக்கிறது. இந்த இடங்களில் இந்தியாவைச் சேர்ந்த எந்த ஒரு மாணவரும் சேரலாம் என்றால், தமிழ்நாடு உள்பட அந்தந்த மாநிலங்களின் உரிமைகள் பாதிக்கப்படும். மிக விரைவில் இந்தத் தீர்ப்புக்கு எதிராக “சீராய்வு மனு” (Review Petition) தாக்கல் செய்யப்படும் என்ற தமிழ்நாடு அரசின் முடிவை இப்பொதுக்குழு வரவேற்கிறது. தமிழ் நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பைப் பாதிக்கும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக அனைத்து சமூக நீதி அமைப்புகளும் கட்சிகளும், அமைப்புகளும் ஒன்றுபட்டுப் போராட முன்வரவேண்டும் என்று இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**மாநில அரசின் உரிமையைப் பறிக்கும் யு.ஜி.சி.யின் வரைவு விதிகளைத் திரும்பப் பெறுக!**

பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தர்கள் நியமிப்பது தொடர்பாக, மாநில ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில், யு.ஜி.சி., எனப்படும் பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு வரைவு விதிகளை வெளியிட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில், ஆசிரியர்கள், பணியாளர்கள் நியமனம் குறித்த விதிகள் இடம் பெற்றுள்ளன. இது, மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் செயலே! அவற்றைத் திரும்பப் பெற வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. அத்துடன் நில்லாமல், இதே போன்ற தீர்மானத்தை, டில்லி, இமாச்சலப்பிரதேசம், ஜம்மு- காஷ்மீர், ஜார்கண்ட், கருநாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்கம், தெலங்கானா மாநில சட்டப்பேரவைகளிலும் நிறைவேற்ற வேண்டும். ஒன்றிய அரசின் இந்த முயற்சிகளுக்கு எதிராக, நாம் ஒன்றுபட்டு நிற்பது மிகவும் முக்கியமும், அவசியமுமாகும். இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, மாநிலச் சட்டப்பேரவைகளில், இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என, அம்மாநில முதலமைச்சர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதி உள்ளது பாராட்டத்தகுந்த முயற்சி. இதன் அடிப்படையில் கேரள மாநிலத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தெலங்கானா மாநிலம் யுஜிசியின் வரைவு விதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் படி, தற்போது கல்வி, “ஒத்திசைவுப் பட்டியலில்” உள்ளது. மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்காமல் கல்வி தொடர்பான எந்த முடிவையும் ஒன்றிய அரசு எடுக்கக்கூடாது. அரசமைப்பு சட்டம் ஏழாம் அட்டவணை மாநிலப் பட்டியல் எண் 32-இன் படி, பல்கலைக்கழகங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதில் நிர்வாக ரீதியான கட்டளையை யு.ஜி.சி. பிறப்பிக்க முடியாது என்கிற நிலையில், யு.ஜி.சி.யின் வரைவு விதிகள், அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானவை; அவற்றைத் திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**சிதம்பரம் நடராஜர் கோவிலை இந்து அறநிலையச் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு கொண்டு வருக!**

“சிதம்பரத்தில் இருக்கும் நடராஜர் கோவில், தீட்சதர்களின் உடைமையில்லை. 10 ஆம் நூற்றாண்டில் சோழ அரசர்களால் கட்டப்பட்டது. இது தனிப்பட்ட யாருக்கும் சொந்தமானதல்ல - பொதுக் கோவில்தான்” என்று நீதிமன்றத் தீர்ப்புகள் உள்ளன. தீட்சிதர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, மேல்முறையீடுகள் செய்து, குறிப்பிட்ட தீட்சிதர் குடும்பங்களின் கட்டுப்பாட்டிலேயே கோவிலை வைத்துக் கொண்டுள்ளனர்.

சிதம்பரம் கோவிலுக்குச் சொந்தமானது 2000 ஏக்கராகும். ஆனால், பெரும்பாலானவற்றை கோவில் தீட்சிதர்கள் விற்று, பணத்தைச் சுருட்டியுள்ளனர். வழக்குகள் மூலம் தெரிய வருகிறது!

சரியான வரவு - செலவுக் கணக்குகள் கிடையாது. உண்டியல் வைப்பது கிடையாது. காணிக்கையாக அளிக்கப்படும் நகைகளை முறையாகக் கணக்கில் கொண்டு வராததால், அவை தீட்சதர்களின் தனிப்பட்ட சொத்தாகப் போய்விடுகிறது.

கோவிலின் நடைமுறைகள், செயல்பாடுகள், தீட்சதர்களின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளில் பக்தர்கள், பொதுமக்கள் பெரும் அதிருப்தி அடைகிறார்கள்.

இவற்றையெல்லாம் கணக்கிலும், கவனத்திலும் கொண்டு, சிதம்பரம் நடராஜர் கோவிலை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும் என்று இப்பொழுதுக்குழு வற்புறுத்துகிறது.

**தீண்டாமை ஒழிப்புச் சட்டத்திற்கு எதிரானது!**

சிதம்பரம் நடராஜர் கோவில் தெற்கு வாசல் பாதை வழியாகக் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நந்தன் நுழைந்தார் என்று சொல்லி, அந்த வாயிலை அடைத்து வைத்துள்ளார்கள். இது அரசின் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்துக்கு எதிரான அப்பட்டமான செயல்பாடே! ஆதலால், அந்த நுழைவு வாயிலைத் திறந்திட ஆவன செய்யுமாறு சமூகநீதிக்கான சரித்திர நாயகர் தலைமையில் இயங்கும் தி.மு.க. அரசினை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**பழனி முருகன் கோவில் அர்ச்சகர்களாக மீண்டும் பண்டாரத்தார்களை நியமனம் செய்க!**

பழனி மலையில் போகர் என்ற சித்தரால் நவபாஷாணங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் பழனி முருகன் சிலை. போகரால் நிர்மாணிக்கப்பட்ட பழனி ஆண்டவன் கோவிலில், சித்தர் போகரின் சீடர் புலிப்பாணியாராலும், அவருக்குப் பின்னர் அவர் வழி வந்த சீடர்களாலும் பூசை முதலியன நடைபெற்று வந்தன.

திருமலை நாயக்க மன்னர் ஆட்சியில் படைத்தளபதியாக இருந்த ராமப்பய்யன் என்னும் பார்ப்பனர், பழனி முருகன் கோவிலுக்கு வந்த போது, கோவிலில் பூசை செய்தவர்கள் சூத்திரர்கள் என்பதால், “அவர்களிடம் பிராமணனாகிய நான் பிரசாதம் வாங்க முடியாது” என்று கூறி, தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்களைப் பூசை செய்யும் பணியிலிருந்து நீக்கி, கொங்குநாட்டுப் பகுதியிலிருந்து அய்ந்து பார்ப்பனர்களைக் கொண்டு வந்து அர்ச்சகர்களாக நியமித்தான் என்று பழனி கோவில் தலப் புராணமே கூறுகிறது.

ஆகமங்கள்பற்றியும், மரபுகள்பற்றியும் உச்சநீதிமன்றம் வரை சென்று பார்ப்பனர்கள் வாதாடுகிறார்கள். அந்த வகையில், பார்க்கப் போனாலும், பழனியாண்டவர் கோவிலிலிருந்து அர்ச்சகப் பார்ப்பனர்களை வெளியேற்றி, போகர் வழிவந்த குடும்பத்தினரையே அர்ச்சகர்களாக அமர்த்தவேண்டும் என்று தமிழ்நாடு அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை சட்டம்!**

அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை சட்டத்தின்படி, முதற்கட்டமாக அர்ச்சகர்கள் தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்பட்டனர். 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மற்ற மற்ற கோவில்களிலும் அர்ச்சகர்களை நியமனம் செய்யுமாறு தமிழ்நாடு அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

2011 ஆம் ஆண்டுக்குப் பின் 2021 ஆம் ஆண்டு எடுக்கப்பட வேண்டிய ஜாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொள்ளாமல் காலம் கடத்திவரும் ஒன்றிய அரசின் நிலைப்பாடு சமூகநீதிக்கு எதிரானது. சட்டப்படி ஜாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொள்வது ஒன்றிய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்பதால், மேலும் காலந் தாழ்த்தாது, உடனடியாக ஜாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொள்ளவேண்டும் என்று ஒன்றிய அரசை இப்பொதுக் குழு வலியுறுத்துகிறது.

**சமூகநீதிக்கு எதிரான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது!**

சமூகநீதி என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையிலேயே வலியுறுத்தப்பட்டுள்ள ஒன்றாகும். ஆனால், பி.ஜே.பி. தலைமையிலான அரசு, ஒன்றியத்தில் அமைந்தது முதல், சமூகநீதித் துறையில் இட ஒதுக்கீட்டின் நோக்கத்தையே சிதற அடிக்கும் வகையில், பொருளாதார அளவுகோல் என்ற ஒன்று திணிக்கப்பட்டுள்ளது. “சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும்” (“Socially, Educationally Backward”) என்ற அணுகுமுறையே சட்டப்படி சரியானதாகும். இதில் பொருளாதார அளவுகோல் முதல் சட்டத் திருத்தம் வந்த போதே நிராகரிக்கப்பட்டு விட்டது. ஆனாலும், இட ஒதுக்கீட்டின் நோக்கத்தை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில், பொருளாதாரத்தில் நலிந்த உயர்ஜாதியினர் என்ற பெயரில் பெரிதும் பார்ப்பனர்களுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு என்று சட்டம் செய்யப்பட்டு இருப்பதும், அதனை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இருப்பதும், உச்சநீதிமன்றம் அளித்த முந்தைய தீர்ப்பைத் தனக்குத் தானே மறுத்திடும் முரண்பாடு என்பதைச் சுட்டிக்காட்டி, பொருளாதார அளவுகோல் என்னும் சமூகநீதிக்கு எதிரான இட ஒதுக்கீட்டை அறவே நீக்குமாறு இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்கும் சமூக அநீதி!**

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்கும் திட்டங்களை பாஜக அரசு தொடர்ந்து செயல்படுத்துகிறது. காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 74 விழுக்காட்டிலிருந்து100 விழுக்காடு உயர்த்தி இருப்பது, எல்.அய்.சி. நிறுவனத்தைத் தனியார் மயத்தை நோக்கி நகர்த்தும் முயற்சியாகும். இதற்கு எதிராக, “பொதுத் துறை நிறுவனங்களைப் பாதுகாப்போம்; அதன் சமூகநீதியைப் பாதுகாப்போம்” என்ற முழக்கத்துடன் அனைவரும் போராட முன்வருமாறு இப்பொதுக்குழு ஒடுக்கப்பட்ட அனைத்து சமூக மக்களையும் கேட்டுக் கொள்கிறது.

**தனியார்த் துறைகளிலும் இட ஒதுக்கீடு தேவை!**

பொதுத் துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் போக்கு நாளும் அதிகரித்துவரும் நிலையில், தனியார்த் துறையிலும் இட ஒதுக்கீடு தேவை என்பதை உணர்ந்து, அதற்கான சட்டத் திருத்தத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று ஒன்றிய அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

மாநில அரசுகளும் இதனை வலியுறுத்தவேண்டும் என்றும் இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

மேலும் பதவி உயர்விலும் இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த வேண்டும் என்றும் இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**திராவிட மாடல் அரசுக்கு பாராட்டு!**

நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களால் 31.1.2025 அன்று முன் வைக்கப்பட்ட 2024-2025 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில், தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 47 சதவீதம், காலணி உற்பத்தித் தொழில்களில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்புகள், இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் மாணவர்களின் கற்றல் ஆர்வம் வெகுவாக அதிகரிப்பு என தமிழ்நாடு இந்திய அளவில் பெரும் சாதனை புரிந்துள்ளது” எனப் பாராட்டப்பட்டுள்ளது.

அனைத்துத்துறைகளிலும், அனைவரையும் உள்ளடக்கிய, ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்ற இலக்கை நோக்கி நடைபெற்று வரும், சமூக நீதிக்கான சரித்திர நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசுக்கு இப்பொதுக்குழு தனது வாழ்த்துகளையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

**அகத்தியர் ஆய்வு என்ற பெயரில் தமிழின்மீது தொடுக்கப்படும் ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்புக் கண்டன மாநாடு**

மத்திய செம்மொழி நிறுவனம் என்னும் அமைப்பு - தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான பயனுள்ள பணிகளில் ஈடுபடாமல், அந்த நிறுவனத்திற்குத் துணைத் தலைவராக தமிழுக்கும், ஆய்வுகளுக்கும் சற்றும் தொடர்பில்லாத ஒரு பார்ப்பன அம்மையார் நியமக்கப்பட்ட நிலையில், சமஸ்கிருதக் கலாச்சாரத்தைத் தூக்கி நிறுத்தும் வகையில் அகத்தியர் என்ற புராணக் கதாபாத்திரத்தை முன்னிறுத்தும் வேலையில், ஒன்றிய அரசின் பெரும் நிதி உதவியுடன் வேகமாக செயல்பட்டு வருவதை தமிழின மக்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது நமது கடமையாகும்.

தமிழ்நாட்டு மக்களும், தமிழினப் புலவர்களும், பேராசிரியர்களும் இதனைக் கவனத்தில் கொண்டு, ஆரியச் சூழ்ச்சியை முறியடிக்கும் பணியில் முனையவேண்டும் என்று இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

தொல்காப்பியம், திருக்குறள் போன்றவற்றை சமஸ்கிருத சார்பு, ஆரியத் தத்துவத்தின் சாரம் என்று திரிபுவாதம் செய்ய முனைவதையும் இப்பொழுதுக் குழு கண்டிக்கிறது.

செம்மொழி நிறுவனம் என்ற நிறுவனத்தின் வழியாகத் தமிழ்மீது தொடுக்கப்படும் செயல்பாடுகளை முறியடிக்கவும், தமிழர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்திடவும், “தமிழின்மீதான ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்புக் கண்டன மாநாட்டினை” சென்னையில் வரும் ஏப்ரல் மாதம், தன்மானப் பெரும் புலவர்கள், ஆய்வாளர்கள், இலக்கியச் செம்மல்களை அழைத்து நடத்துவது என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.


**வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு**

ஒன்றிய அரசின் 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், வழமை போல், தமிழ்நாட்டிற்கென்று எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை. தமிழ்நாடு அரசு கோரிய பேரிடர் நிவாரண நிதி, மெட்ரோ ரயில், நெடுஞ்சாலைகள் முதலிய வளர்ச்சித் திட்டங்கள், பணிகளுக்கான நிதி குறித்த அறிவிப்புகள் எதுவும் இல்லை. சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கி உள்ள மாநிலங்களுக்கும், பாஜக ஆளும் மாநிலங்களுக்கும் மட்டுமே நிதி ஒதுக்கீடு என்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது. சமக்ரா சிக்ஷா திட்டத்திற்காக பள்ளிக் கல்வித் துறைக்குத் தரவேண்டிய ரூ.2,152 கோடியைத் தர மறுப்பதும், அதைப் பிற மாநிலங்களுக்கு மடை மாற்றுவதும், பி.எம்.சிறீ திட்டத்தின்படி மும்மொழித் திட்டத்தைக் கட்டாயப்படுத்துவதும் அதிகார வரம்பு மீறலே ஆகும். தமிழ்நாடு உள்ளிட்ட எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கைக்கு, இப்பொதுக்குழு தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் நிலைப்பாடு என்பதை எப்போதும் நினைவில் கொள்ள இப்பொதுக்குழு ஒன்றிய அரசை வற்புறுத்துகிறது.

தமிழ்நாட்டில் செயல்படும் ஒன்றிய அரசின் நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்களில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். NLC, BHEL, ONGC Power Grid etc, வங்கிகள், ரயில்வே போன்றவற்றில் வட இந்தியர்கள் ஆதிக்கம் நிரம்பியுள்ளது. வட இந்தியர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையிலேயே இந்நிறுவனங்களின் செயல்பாடுகள் அமைந்து வருகின்றன.

தற்போதைய NLC விளம்பர எண் 19/2024ன் படி (16.12.2024), 167 பொறியாளர்களை GATE மதிப்பெண்கள் மூலம் எடுக்கவிருக்கிறது. எம்.இ., எ.டெக். படிப்பவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான கேட் நுழைவு தேர்வை, என்.எல்.சி. பொறியாளர்களைத் தேர்ந்தெடுக்க நடத்துவது அவசியம் அற்றதாகும். இந்த அதீத முறையை நிறுத்திவிட்டு, தமிழ்நாட்டுப் பட்டதாரி இளைஞர்களுக்கும் பயன்படும் வகையில் தேர்ந்தெடுப்பு நடைமுறைகள் அமைய வேண்டும் என்று இப்பொதுக் குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வாகியுள்ள சமர் கலைக்குழுவின் தலைவர் பறையிசை ஆசிரியர் வேலு ஆசான் அவர்கள், 14.02.2025 அன்று திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களை சி.ஐ.டி. காலனி இல்லத்தில் தனது குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக திருப்பத்தூர் & காஞ்சிபுரம் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.02.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | திருப்பத்தூர் | எஸ்.ஆர்.கே.கன்வென்ஷன் ஹால், ஈத்கா ரோடு, (வடமலை பவன் பின்புறம்) திருப்பத்தூர். |
| 19.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | ப்ரியா மஹால், மல்லியங்கரணை செல்லும் வழி, உத்திரமேரூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14-02-2025




# தருமபுரி மேற்கு மாவட்டம் - காரிமங்கலத்தில் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைகள் வழங்கி பேசினார்!

தருமபுரி, பிப். 17-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி,வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் வழிகாட்டுதல்படி தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் காரிமங்கலம்,மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.மனோகரன் தலைமை வகித்தார்.தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஆ.மணி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் கழகத் தலைவர் திராவிடநாயகர் அவர்களின் 72 வது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக விளக்கியும் கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கியும் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் கழகத் தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஒவ்வொரு ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும், பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டுகளிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது, 2019 தொடங்கி தொடர்ந்து தேர்தல் களத்தில் வெற்றி வீரராய் விளங்கி கொண்டிருக்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அவர்களின் 200 தொகுதிகளின் இலக்கு, அதனை தொடங்கி வைத்த ஈரோடு கிழக்கு, சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுதல், மற்றும் கழக வளர்ச்சிப்பணிகள், தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் மோடி தலைமையிலான ஒன்றிய அரசைக் கண்டித்து தீர்மானம் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது தொடர்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் கீரை. விசுவநாதன், சூடப்பட்டி. சுப்பிரமணி, ராஜேந்திரன், சத்தியமூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் முருகன், பொறியாளர். சி.கிருஷ்ணகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.எல்.வெங்கடாசலம், ஒன்றிய kalaga செயலாளர்கள் வழக்கறிஞர்.எம்வீடி கோபால், எஸ்.முனியப்பன், அன்பழகன், கண்ணபெருமாள், செங்கண்ணன், ரத்தினவேல், முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், சிவபிரகாசம், சக்திவேல், வேடம்மாள், மாது, டாக்டர்.பிரபு ராஜசேகர், பேரூர் கழக செயலாளர்கள் முல்லைரவி, பி.கே.முரளி, மோகன், கு.கௌதமன் கொ.ஜெயசந்திரன், கே.வி.கே.வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பி.சி.ஆர்.மனோகரன், சென்னகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள், கலைவாணி, குட்டி. மோகன், முத்துஜா, மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர். கலந்து கொண்டனர்.


## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

**ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி. எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 20-2-2025 வியாழக்கிழமை, காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 15.02.2025.

ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு



## தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

**தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!**

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 18.2.2025 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள் : 15.02.2025.

ஏ.கே.எஸ்.விஜயன்,
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி